Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, அக்டோபர் 04, 2024 | இதழ் 174

## தொண்டர்கள் ராணுவ கட்டுப்பாட்டுடன் இயங்க வேண்டும், வி.சாலை எனும் வெற்றிச் சாலையில் விரைவில் சந்திப்போம்

## மக்களுக்காக உழைக்க வேண்டும் என்பதே எனது லட்சிய கனல் எனக்கு அரசியல் தெரியாதா? 27-ந் தேதி மாநாடு பதில் சொல்லும்

# விஜய் காட்டம்

சென்னை, 04 அக் 2024: தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு என்பது நம் அரசியல் கொள்கை பிரகடன மாநாடு. ஏதோ பேருக்கு அரசியலுக்கு வந்த கட்சி அன்று. வீறு கொண்டு எழுந்து அரசியல் களத்தில் வெற்றி காணப் போகின்ற கட்சி என்பதை நம்மை எடைபோடுவோரும் இனி மேல் புரிந்துகொள்வர் என்று தொண்டர்களுக்கு அக்கட்சியின் தலைவர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

தொண்டர்கள் ராணுவ கட்டுப்பாட்டுடன் இயங்க வேண்டும், வி.சாலை எனும் வெற்றிச் சாலையில் விரைவில் சந்திப்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.

நடிகர் விஜய் கட்சியான தமிழக வெற்றிக் கழக மாநாடு இம் மாதம் 27ம் தேதி விக்கிரவாண்டியை அடுத்த வி.சாலையில் நடைபெறுகிறது. இம்மாநாட்டுக்கு கடந்த 25ம் தேதி இரவு காவல் துறை 17 நிபந்தனைகளுடன் அனுமதி அளித்தது.

இந்த நிலையில், மாநாட்டின் ஒரு பகுதியாக மாநாட்டு மேடை அமைப்பதற்கான பந்தக்கால் நடும் நிகழ்ச்சி மாநிலச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தலைமையில் இன்று அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் நடைபெற்றது.

புதுச்சேரி விக்னேஷ் குருக்கள் மந்திரங்கள் சொல்ல மும்மதங்கள் சார்ந்த படங்களை வைத்து மும்மதம் சார்ந்த புனித நீர் தெளித்து பூஜை நடந்தது.

கட்சித் தொண்டர்களின் ஆரவாரத்துக்கு மத்தியில் இன்று காலை 4.50 மணிக்கு மாநாட்டிற்காக சென்னை மாநாட்டு பந்தல் அமைப்பாளர் ஆனந்தன் பந்தல் காலை நட்டார். அதைத் தொடர்ந்து புஸ்ஸி ஆனந்த் தொண்டர்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்காக அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அம்மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற கோயில்களிலிருந்து தீர்த்தங்கங்கள் கட்சியினரால் எடுத்து வரப்பட்டு பந்தல் கால் நடும் போது தெளிக்கப்பட்டது.

விழாவில் அதிக அளவிலான பெண்கள் கலந்துகொண்டனர். பந்தக்கால் நடும்போது, மாநில மாநாடு வெல்லட்டும்..வெல்லட்டும்.. என தொண்டர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

பந்தல்கால் நடுவிழாவில் பங்கேற்க வந்த தமிழக வெற்றிக் கழகத்தின் பல்வேறு மாவட்ட நிர்வாகிகள் சென்னை தேசிய நெடுஞ்சாலையின் சாலையோரத்தில் வாகனங்களை நிறுத்தியதால், அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. போலீசார் போக்குவரத்தை சரி செய்தனர். மாநாடு நடைபெறும் பகுதியைச் சுற்றி ஆயிரக்கணக்கான கார்கள் நிறுத்தப்பட்டதால் மாநாட்டுப் பகுதிக்குள் செல்வதற்கு பெரும் இடையூறு ஏற்பட்டது. அந்த பகுதியில் நேற்று இரவு பெய்த மழையின் காரணமாக மாநாடு நடைபெறும் பகுதி முழுவதும் சேறும் சகதியுமாக காணப்பட்டதால் பலரும் அவதிக்குள்ளாகினர்.



இந்நிலையில், மாநாடு தொடர்பாக விஜய் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், “உங்களை நானும், என்னை நீங்களும் நினைக்காத நாளில்லை. அவ்வளவு ஏன்? நினைக்காத நிமிடம்கூட இல்லை. ஏனெனில், இந்த உறவானது தூய்மையான குடும்ப உறவு. அந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்த கடிதம். அதுவும் முதல் கடிதம். தமிழக மக்களுக்காக நாம் உழைக்க வேண்டும். இன்னமும், முழுமை பெறாத அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிரந்தரமாகப் பூர்த்தி செய்ய வேண்டும். அதை, அரசியல் ரீதியாக சட்டப்பூர்வமாக, உறுதியாக நிறைவேற்றிக் காட்ட வேண்டும். இதுதான், என் நெஞ்சில் நீண்ட காலமாக அணையாமல், கொழுந்துவிட்டு எரிந்துகொண்டே இருக்கும் ஒரு லட்சியக் கனல்.

இன்று, நமது முதல் மாநில மாநாட்டுக்கான கால்கோள் விழா இனிதே நடந்தேறி இருக்கிறது. இது மாநாட்டுத் திடல் பணிகளுக்கான தொடக்கம், ஆனால், நம் அரசியல் களப் பணிகளுக்கான கால்கோள் விழா என்பதும் இதில் உள்ளர்த்தமாக உறைந்து கிடக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நம் மாநாடு எதற்காக என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே? நம் கழகத்தின் முதல் மாநில மாநாடு என்பது நம்முடைய அரசியல் கொள்கைப் பிரகடன மாநாடு. இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமெனில், இது நம்முடைய கொள்கைத் திருவிழா. அதுவும் வெற்றிக் கொள்கைத் திருவிழா. இப்படிச் சொல்லும்போதே, ஓர் எழுச்சி உணர்வு, நம் நெஞ்சில் தொற்றிக்கொள்கிறது. இது, தாய்மண்ணை நிஜமாக நேசிக்கும் அனைவருக்கும் இயல்பாக நிகழ்வதுதான். இந்த வேளையில், ஒன்றே ஒன்றை மட்டும் அழுத்தமாகச் சொல்ல வேண்டும் என விரும்புகிறேன். அதை நாம் எப்போதும் ஆழமாக மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். பொறுப்பான மனிதனைத்தான் குடும்பம் மதிக்கும். பொறுப்பான குடிமகனைத்தான் நாடு மதிக்கும். அதிலும் முன்னுதாரணமாகத் திகழும் மனிதனைத்தான் மக்கள் போற்றுவர். ஆகவே, நம் கழகத்தினர் இம்மூன்றாகவும் இருக்க வேண்டும் என்பதே என் பெருவிருப்பம்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தொடங்கி, மாநாட்டில் பங்கேற்பது வரை நம் கழகத்தினர் ராணுவக் கட்டுப்பாட்டுடன் இயங்குவர் என்பதை இந்த நாடும் நாட்டு மக்களும் உணர வேண்டும். நாம் உணர வைக்க வேண்டும். நம் கழகம், மற்ற அரசியல் கட்சிகள் போல் சாதாரணமான இயக்கமன்று. இது ஆற்றல் மிக்கப் பெரும்படை இளஞ்சிங்கப் படை, சிங்கப் பெண்கள் படை, குடும்பங்கள் இணைந்த கூட்டுப் பெரும்படை. ஆகவே, நம்மிடம் உற்சாகம் இருக்கலாம். கொண்டாட்டம் இருக்கலாம். குதூகலம் இருக்கலம். ஆனால், படையணியினர் ஓரிடத்தில் கூடினால், அந்த இடம் கட்டுப்பாடு மிக்கதாக மட்டுமில்லாமல் பக்குவம் நிறைந்ததாகவும் இருக்கும் என்பதையும் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இவர்களுக்கு அரசியல் என்றால் என்னவென்று தெரியுமா? மாநாடு என்றால் என்னவென்று தெரியுமா? களத்தில் தொடர்ச்சியாக நின்று வென்று காட்ட இயலுமா? இப்படி ஏகப்பட்ட கேள்விகளை நம் மீது வீசுவதில் அதீத விருப்பம் கொண்டவர்களாகச் சிலர் இருக்கின்றனர். இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் காட்டும்போதுதான் அவர்களுக்குப் புரியும். தமிழக வெற்றிக் கழகம் ஏதோ பேருக்கு அரசியலுக்கு வந்த கட்சி அன்று. வீறு கொண்டு எழுந்து அரசியல் களத்தில் வெற்றி காணப் போகின்ற கட்சி என்பதை நம்மை எடைபோடுவோரும் இனி மேல் புரிந்துகொள்வர்.

மக்கள் இயக்கமாக இருந்த நாம். மக்களோடு மக்களாக நின்று களமாடி, அரசியல் உரிமைகளை வென்றெடுக்கப் போகும் இயக்கமாக மாறிவிட்டோம். அரசியல் களப் பணிகள் வேறு. அதற்கான நடைமுறைகள் வேறு. ஆம், அரசியல் களத்தில் வேகமாக இருப்பது எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம் விவேகமாக இருப்பது. மேலும், யதார்த்தமாக இருப்பதைவிட எச்சரிக்கையுடன் களமாடுவது இன்னும் அவசியம்.

இவை அனைத்தையும் உள்வாங்கி, உறுதியோடும் உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் மாநாட்டுப் பணிகளைத் தொடங்கித் தொடர்ந்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாநாட்டுப் பணிகளுக்கான குழுக்களின் பொறுப்பாளர்களும் அதுசார்ந்த சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர்களும் விரைவில் அறிவிக்கப்பட இருக்கின்றனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது ஒற்றுமையே நமது வலிமை என்பதை நாட்டுக்கு உணர்த்தும் வகையில் மாநாட்டுப் பணிகளைத் தொடர வாழ்த்துகிறேன்.

இந்நிலையில், மாநாட்டுக்கான நாட்களை மனம் எண்ணத் தொடங்கிவிட்டது. உங்களை வெகு அருகில் சந்திக்கப் போகும் சந்தோஷத் தருணங்களை இப்போதே மனம் அளவிடத் தொடங்கிவிட்டது. வி.சாலை எனும் வெற்றிச் சாலையில் விரைவில் சந்திப்போம்.” என்று விஜய் கூறியுள்ளார்.

## திண்டுக்கல்லில் போலீசாரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பி ஓடிய ரவுடி: சுட்டுப் பிடித்த போலீசார்




சென்னை, 04 அக் 2024: திண்டுக்கல்லில் போலீசாரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பி ஓட முயன்ற ரவுடியை போலீசார் சுட்டுப்பிடித்தனர்.

திண்டுக்கல், பேருந்து நிலையம் பாலாஜி பவன் எதிரே பென்சனர் காம்பவுண்ட் சாலையில் கடந்த மாதம் 28 ஆம் தேதி முகமது இர்பான் என்பவரை மர்ம கும்பல் வெட்டி படுகொலை செய்தது. வாலிபரை வெட்டி படுகொலை செய்த வழக்கில் தொடர்புடைய ரவுடி ரிச்சர்ட் சச்சின் உட்பட 4 பேரை போலீசார் கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து திண்டுக்கல் மாலைப்பட்டி பகுதியில்




பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை எடுப்பதற்காக வடக்கு போலீசார் ரவுடி ரிச்சர்டை காரில் அழைத்து வந்தனர்.

அப்போது மாலைப்பட்டி அருகே வந்தபோது ரவுடி ரிச்சர்ட் சச்சின் அருகில் இருந்த காவலரை கையில் அரிவாளால் வெட்டிவிட்டு தப்ப முயன்றார். இதனையடுத்து, திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் வெங்கடாஜலபதி, ரவுடி ரிச்சர்ட சச்சினின் வலது காலில் சுட்டு பிடித்தார்.

மேலும், ரவுடி ரிச்சர்ட் சச்சின் தாக்கியதில் காவலர் அருண் படுகாயமடைந்தார். காவலர் அருண் மற்றும் ரவுடி ரிச்சர்ட் சச்சின் இருவரும் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் சமீபகாலமாக ரவுடிகள் மீது என்கவுண்டர் அல்லது துப்பாக்கி சூடு சம்பவம் அதிகரித்து வருகிறது. அந்த வகையில், திண்டுக்கல் ரவுடி மீது துப்பாக்கி சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# கேதாரா நிறுவனத்தால் ஆதரிக்கப்பட்ட அஜாக்ஸ் இன்ஜினியரிங் லிமிடெட் டி ஆர் எச் பி ஐ செபி யிடம் தாக்கல் செய்தது

சென்னை, 04 அக் 2024: கான்கிரீட் உபகரணங்கள், சேவைகள் மற்றும் கான்கிரீட் பயன்பாட்டு மதிப்புச் சங்கிலி முழுவதும் தீர்வுகள் ஆகியவற்றின் ஒரு விரிவான வரம்பைக் கொண்ட கான்கிரீட் உபகரண உற்பத்தியாளரான கேதாரா நிறுவனத்தால் ஆதரிக்கப்பட்ட அஜாக்ஸ் இன்ஜினியரிங் லிமிடெட், ஒரு ஆரம்பப் பொது வழங்கலை வெளியிடுவதற்காக டிராஃப்ட் ரெட் ஹெர்ரிங் ப்ரோஸ்பெக்டஸை மூலதன சந்தை கட்டுப்பாட்டாளரான செபியிடம் தாக்கல் செய்துள்ளது.

டிராஃப்ட் ரெட் ஹெர்ரிங் ப்ரோஸ்பெக்டஸ்ன்படி, பெங்களூரு ஐ தலைமையக்கமாகக்கொண்ட இந்த நிறுவனத்தின் ஆரம்பப் பொது வழங்கல் விற்பனை செய்யும் பங்குதாரர்களால் 2,28,81,718 ஈக்விட்டி பங்குகள் (2.28 கோடி ஈக்விட்டி பங்குகள்) வரையிலான ஒரு விற்பனைக்கான வழங்கலைக் கொண்டுள்ளது.

இந்த ஓ எஃப் எஸ் ஆனது, கேதாரா கேபிட்டல் (முதலீட்டாளர் விற்பனை செய்யும் பங்குதாரர்) மூலம் செய்யப்பட்ட 74,36,800 வரையிலான ஈக்விட்டி பங்குகள் ; கிருஷ்ணசாமி விஜய் மற்றும் கல்யாணி விஜய் மூலம் தலா 28,60,170 வரையிலான ஈக்விட்டி பங்குகள்; ஜேக்கப் ஜிதன் ஜான் மூலம் 22,88,136 ஈக்விட்டி பங்குகள்; ஜேக்கப் ஹேன்சன் ஃபேமிலி டிரஸ்ட் (உருவாக்குநர் குழும பங்குதாரர்) மூலம் 60,06,357 ஈக்விட்டி பங்குகள் மற்றும் சூசி ஜான் (உருவாக்குநர் குழும பங்குதாரர்) மூலம் 14,30,085 ஈக்விட்டி பங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

1992 இல் இணைக்கப்பட்ட, அஜாக்ஸ் இன்ஜினியரிங் ஒரு விரிவான தயாரிப்பு போர்ட்ஃபோலியோவை உருவாக்கியுள்ளது, இதில் செல்ஃப் லோடிங் கான்கிரீட் மிக்ஸர்கள் (எஸ் எல் சி எம் கள்) மற்றும் கான்கிரீட் உற்பத்திக்கான பேட்ச்சிங் ஆலைகள், கான்கிரீட் கொண்டுசெல்வதற்கான போக்குவரத்து மிக்ஸர்கள், பூம் பம்ப்கள், கான்கிரீட் பம்ப்கள் மற்றும் கான்கிரீட் இடுவதற்கான சுயமாக இயக்கப்படும் பூம் பம்ப்கள், கான்கிரீட் பாவுதலுக்கான ஸ்லிப்-ஃபார்ம் பேவர்கள் மற்றும் கான்கிரீட் வைப்பதற்கான 3டி கான்கிரீட் பிரிண்டர்கள் ஆகியவை அடங்கும்.

இந்த கான்கிரீட் உபகரணங்கள், சாலைகள், ரயில் பாதைகள், நிலத்தடி சுரங்கப்பாதைகள், உயர்த்தப்பட்ட பாதைகள் மற்றும் மேம்பாலங்கள் போன்ற போக்குவரத்துத் திட்டங்கள்; நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், தடுப்பு அணைகள் மற்றும் நீர்வழிகள் போன்ற நீர்ப்பாசனத் திட்டங்கள், மற்றும் நிலத்தோற்றம், வடிகால், தொழிற்சாலைகள், விமான நிலையங்கள் கட்டுமானம் , மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் எண்ணெய் மற்றும் எரிவாயு முனையங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய உள்கட்டமைப்பு திட்டங்கள் போன்றவை முழுவதிலும் பரந்த அளவிலான பயன்பாட்டு நிகழ்வுகளைக் கொண்டுள்ளன மேலும் பயன்படுத்தப்படுகின்றன.

கிருஷ்ணசுவாமி விஜய், செயல் தலைவர், மறைந்த ஜேக்கப் ஜான் மற்றும் மறைந்த அனில்குமார் சிங் ஆகியோரால் இணைந்து நிறுவப்பட்ட அஜாக்ஸ் இன்ஜினியரிங், கர்நாடகாவில் உள்ள ஒபடேனஹள்ளி, கவுரிபிடனூர் மற்றும் பஷெட்டிஹள்ளி ஆகிய இடங்களில், ஒவ்வொரு வசதியும் வெவ்வேறு தயாரிப்பு வரிசையில் நிபுணத்துவம் பெற்ற, நான்கு அசெம்பிளிங் மற்றும் உற்பத்தி வசதிகளை இயக்குகிறது. கர்நாடகாவின் ஆதிநாராயணஹோசஹள்ளியில் உள்ள அசெம்பிளிங் மற்றும் உற்பத்தி நிலையம் தற்போது கட்டுமானத்தில் உள்ளது மற்றும் மார்ச் 2025 இல் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .

மார்ச் 31, 2024 நிலவரப்படி, அஜாக்ஸ் நிறுவனத்தின் டீலர் நெட்வொர்க் இந்தியாவில் 23 மாநிலங்களில் 51 டீலர்ஷிப்களைக் கொண்டுள்ளது மற்றும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா முழுவதும் 25 டீலர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடன் அதன் உலகளாவிய வரம்பை விரிவுபடுத்தியுள்ளது.

இந்தியாவில் எஸ் எல் சி எம் சந்தையில் ஒரு தோராயமாக 75% சந்தைப் பங்கைக் கொண்டு (நிதியாண்டு 24 இல் விற்கப்பட்ட எஸ் எல் சி எம்களின் எண்ணிக்கையின் அடிப்படையில்) எஸ் எல் சி எம்களின் உலகின் மூன்று பெரிய உற்பத்தியாளர்களில் ஒருவரான அஜாக்ஸ் ரூ. 225 கோடி வரிக்குப் பிந்தைய லாபத்துடன் ரூ. 1741 கோடியின் நிதியாண்டு 24 செயல்பாடுகள் மூலம் வருவாயை தாக்கல் செய்தது. ஐ சி ஐ சி ஐ செக்யூரிட்டீஸ் லிமிடெட், சிட்டி குரூப் குளோபல் மார்க்கெட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஜேஎம் பைனான்சியல் லிமிடெட், நுவாமா வெல்த் மேனேஜ்மென்ட் லிமிடெட் மற்றும் எஸ்பிஐ கேபிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட் ஆகியவை இந்த வெளியீட்டின் புக் ரன்னிங் லீட் மேலாளர்களாக உள்ளன. இந்த ஈக்விட்டி பங்குகள் பி எஸ் ஈ மற்றும் என் எஸ் ஈ யில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளன.

# உலகின் மிக உயரமான மோட்டார் வாகனம் மூலம் அடையக்கூடிய கிராமத்தில் வண்ணப்பூச்சு மற்றும் மனித ஆன்மாவின் நீடித்த சக்தியை அக்சோநோபல் கொண்டாடுகிறது



சென்னை, 04 அக் 2024: அக்ஸோநோபல் இந்தியா இன்று ஹிமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மூன்று தொலைதூர கிராமங்களில் அதன் வண்ணப்பூச்சின் மாற்றும் சக்தியை உலகின் உச்சிக்கு எடுத்துச் செல்கின்ற லெட்'ஸ் கலர் முயற்சியின் நிறைவை அறிவித்தது!

இந்நிகழ்ச்சியின் பிரதம விருந்தினரும், காசா ஏ டி சி யுமான திரு.ராகுல் ஜெயின், லார்ட் புத்தர் சிலை முன்பு குத்துவிளக்கு ஏற்றி இந்த நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில் கோமிக், ஹிக்கிம் மற்றும் லாங்சா கிராமங்களில் வசிக்கும் 100க்கும் மேற்பட்டவர்களுடன், கோமிக் மற்றும் லாங்சா மடாலயங்களைச் சேர்ந்த லாமாக்களும் கூடுதலாக கலந்து கொண்டனர். இந்த தனித்துவமான "லெட்'ஸ் கலர்" வண்ணம் பூசுவோம் திட்டம், கோமிக் (மோட்டார் வாகனம் மூலம் அடையக்கூடிய உலகின் மிக உயரமான கிராமம்) ஹிக்கிம் (உலகின் மிக உயரமான தபால் நிலையம் இருக்குமிடம் ); மற்றும் லாங்சா (இமயமலையை விட பழமையான கடல் புதைபடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடம் ) ஆகிய இடங்களில் அரங்கேற்றப்பட்டன.

கடல் மட்டத்திலிருந்து 15,000 அடிக்கு மேல் (எவரெஸ்ட் சிகரத்தின் அடிப்பகுதிக்குச் சமமான அதே உயரத்தில்) வாழ்கின்ற, குளிர்கால வெப்பநிலையை -25 குசிக்கும் குறைவாக அனுபவிக்கின்ற, கிராமவாசிகள், பெரும்பாலும் திபெத்திய பௌத்தர்கள் ஆண்டுதோறும் மீண்டும் வர்ணம் பூசுவதற்கான முயற்சியில் பாடுபடுகின்றனர்.

பழங்குடி சமூகங்களுக்கு நீண்ட காலம் உழைக்கும் அனைத்து வானிலை பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, 20 வர்ணம் பூசுபர்கள் 10,500 லிட்டருக்கும் அதிகமான டூலக்ஸ் வெதர் ஷீல்டு வரம்பில் உள்ள வெளிப்புற எமல்சன் மற்றும் எனாமல்களைப் பயன்படுத்தியதால் இது இப்போது மாறிவிட்டது.

"இது ஒரு 'லெட்'ஸ் கலர்' திட்டத்தை விட அதிகமாக, உலகெங்கிலும் உள்ள சமூகங்களுக்கான எதிர்காலத்தை சித்தரிப்பதில் அக்ஸோ நோபல் நிறுவனத்தின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. வண்ணம் உண்மையில் நாம் நினைப்பதை விட அதிக சக்தி கொண்டது. இன்றைய குடியிருப்பாளர்களுக்கு உத்வேகமான வாழ்க்கை இடத்தை உருவாக்கும் அதே வேளையில், தீவிர இமாலய குளிர்காலத்திற்கு எதிராக நீடித்த பாதுகாப்பை வழங்குவதற்கும், இப்பகுதியின் பல நூற்றாண்டுகள் பழமையான பௌத்த ஆன்மீக மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கும் அப்பால் செல்கிறது, "என்று அக்சோநோபல் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் ராஜீவ் ராஜ்கோபால் கூறினார்.

இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள இமயமலையின் ஒரு மிக உயரமான குளிர் பாலைவனப் பகுதியான ஸ்பிதி பள்ளத்தாக்கில் அமைந்துள்ள மூன்று கிராமங்களின் இந்த உருமாற்றம் நான்கு மாதங்களின் கால அளவில் நிகழ்ந்தது. ஒரு குறிப்பிடத்தக்க 300,000 சதுர அடி பரப்பளவை உள்ளடக்கிய இந்த புத்துயிர்ப்பு 100க்கும் மேற்பட்ட வீடுகள், மூன்று பள்ளிகள், மூன்று மடங்கள், 8 கஃபேக்கள் மற்றும் 12 தங்கும் விடுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

கூடுதலாக இந்த உருமாற்றம், 14 ஆம் நூற்றாண்டின் டாங்யுட் மடாலயம் (உலகின் மிகப் பழமையான ஒன்று) மற்றும் கோமிக் அருங்காட்சியகம் போன்ற இந்த பிராந்தியத்தின் கலாச்சார அடையாளத்துடன் ஒருங்கிணைந்த பல கட்டிடங்களுக்கு புத்துயிர் அளித்தது. கிராமவாசிகளுடன் இணைந்து, அக்ஸோநோபல் குழு, உலகளாவிய இரக்கத்திற்கான ஊதா நிறங்கள், தூய்மையைக் குறிக்கும் வெள்ளை மற்றும் ஆசீர்வாதங்களுக்காக சிவப்பு ஆகிய புத்த மரபுகளில் மூழ்கியிருக்கும் ஆத்மார்த்தமான சாயல்களின் ஒரு அடுக்கைத் தேர்ந்தெடுத்தது. இந்த திட்டத்தின் தாக்கம் அழகியலுக்கு மிகவும் அப்பாற்பட்டது. ஒரு மேலும் உயிரோட்டமான மற்றும் வரவேற்கும் சூழலை உருவாக்குவதன் மூலம் சுற்றுலாவை மேம்படுத்த உதவும் நோக்கத்துடன் கூடிய, மடாலயத்தில் உள்ள சாந்தியின் படமான ஒரு தியானம் செய்யும் புத்தர் , வசிப்பிடத்தில் ஒரு பிரார்த்தனைச் சக்கரத்துடன் வாழும் இளம் புத்த துறவி, பூர்வீக இனங்கள் பற்றிய விழிப்புணர்வை பரப்புகின்ற தாக்கக்கூடிய பனிச்சிறுத்தைகள், இமயமலை காட்டு மலை ஆடுகள் மற்றும் யாக்ஸ் ஆகிய இப்பகுதியின் கலைத் தலையீடுகள் போன்ற சுவரோவியங்களின் ஒரு வரிசையையும் உள்ளூர் கலைஞர் ஒருவர் வரைந்துள்ளார். இந்த காட்சிப்படுத்தும் சுவரோவியம், பால்வெளி விண்மீனின் அரிய காட்சியைக் கண்டு வியக்க சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கிறது.

"சமூகங்களை மேம்படுத்தவும், நேர்மறையான மாற்றத்தை ஊக்குவிக்கவும் வண்ணப்பூச்சின் உருமாற்றும் சக்தியைப் பயன்படுத்துவதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்" என்று ராஜ்கோபால் கூறுகிறார். "ஜோத்பூரின் காலமற்ற ப்ளூ சிட்டி அழகை மீண்டும் கொண்டுவருவது மற்றும் கொளுத்தும் வெப்பத்தில் வீடுகளை குளிர்ச்சியாக வைத்திருப்பது அல்லது தீவிர உறையவைக்கும் குளிர்காலத்தில் இருந்து உலகின் உச்சியில் உள்ள கிராமங்களைப் பாதுகாப்பது ஆகியவை அடங்கும்."

அக்சோ நோபல் இன் உலகளாவிய “லெட்'ஸ் கலர்” முன்முயற்சி 2009 இல் தொடங்கப்பட்டது. இன்றுவரை, 46 நாடுகளில் 100 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான லிட்டர் வண்ணக்கலவையைப் பயன்படுத்துகின்ற 3,000 திட்டங்களால் பயனடைந்துள்ளனர்.

# அரசு பழங்குடியினர் குடியிருப்பு மேல்நிலைப் பள்ளிக்கு சூரிய சக்தி மின்சார வசதியை அமைத்து கொடுத்த ஈக்யூ இந்தியா நிறுவனம்



சென்னை, 04 அக் 2024: ஈக்யூ இந்தியா நிறுவனம், தங்களது பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு முயற்சியின் ஒரு பகுதியாக தமிழ்நாடு, ஹாசனூரில் உள்ள அரசு பழங்குடியினர் குடியிருப்பு மேல்நிலைப் பள்ளிக்கு சூரிய சக்தி மூலம் மின்சார வசதியை அமைத்து கொடுத்துள்ளது.

கடந்த ஜூலை 2024இல் இப்பள்ளியை புனரமைக்கும் பணிகளை துவங்கிய ஈக்யூ இந்தியா நிறுவனம் முதல்கட்டமாக, மேம்படுத்தப்பட்ட கற்றல் சூழலை உருவாக்க புதிய கூரை, பாதுகாப்பான வாயில் மற்றும் வளைவு மற்றும் மீண்டும் வண்ணம் தீட்டுதல் ஆகிய பணிகளை முடித்தது.

தற்போது இரண்டாம் கட்டமாக, வகுப்பறைகள், பள்ளி அலுவலகம் மற்றும் மாணவர் விடுதிகளுக்கு அத்தியாவசிய காப்பு மின்சாரம் வழங்குவதற்காக 5 கிலோவாட் சூரிய மின் உற்பத்தி நிலையம் அமைத்தல், மாணவர்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய இரண்டு தண்ணீர் தொட்டிகள் மற்றும் ஒரு சூரிய சக்தி மூலம் சுடுநீர் வழங்கும் தண்ணீர் தொட்டி அமைத்தல் போன்ற பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்து ஈக்யூ இந்தியாவின் நிர்வாக இயக்குநர் ஆனந்த் ராமகிருஷ்ணன் கூறுகையில், எங்களது பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு முயற்சியின் ஒரு பகுதியாக மாணவர்களின் கல்வி வசதிக்காக தமிழ்நாட்டின் ஹாசனூரில் உள்ள அரசு பழங்குடியினர் குடியிருப்பு மேல்நிலைப் பள்ளியின் உள்கட்டமைப்பை மேம்படுத்தியதில் பெருமிதம் கொள்கிறோம். சூரிய சக்தி மூலம் மின்சாரம் வழங்கும் அமைப்பு, தண்ணீர் தொட்டிகள் மற்றும் சூரியசக்தி மூலம் இயங்கும் தெருவிளக்குகளை நிறுவுவதன் மூலம், மாணவர்களின் கல்வி தேவைக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான கல்வி வளாகத்தை உருவாக்கியுள்ளோம்". என்று கூறினார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு பி.பாலகிருஷ்ணன் கூறுகையில், ஈக்யூ இந்தியாவின் இந்த முன்முயற்சியின் காரணமாக மைக்கப்பட்டுள்ள இந்த சூரியசக்தி மின்சார வசதி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதுடன் இப்பகுதியை சேர்ந்த அனைவருக்கும் பயனளிக்கிறது." என்று தெரிவித்தார்.

# ஹம்சவிர்தன் நடிக்கும் அதிரடி சஸ்பென்ஸ் கமர்ஷியல் திரைப்படமான ‘மகேஸ்வரா‘ படப்பிடிப்பில் சண்டைக் காட்சியின் போது விபத்து சிறு காயங்களுடன் ஹம்சவிர்தன் உள்ளிட்டோர் தப்பினர்



சென்னை, 04 அக் 2024: 'புன்னகை தேசம்', 'ஜூனியர் சீனியர்', 'மந்திரன்', 'பிறகு' உள்ளிட்ட திரைப்படங்களில் முதன்மை வேடங்களில் நடித்த ஹம்சவிர்தன் நாயகனாக நடிக்கும் புதிய படமான 'மகேஸ்வரா' முதல் கட்ட படப்பிடிப்பு திருச்சி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நடைபெற்றது.

ரெட் டிராகன் எண்டர்டெயின்மென்ட் பேனரில் ஹம்சவிர்தன் தயாரிக்கும் இப்படத்தை மோகன் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'ஹரா' படத்தை இயக்கிய விஜய் ஸ்ரீ ஜி இயக்குகிறார்.

உயர்ரக சொகுசு பென்ஸ் கார் ஒன்றை நொறுக்கி தரைமட்டமாக்கும் பரபரப்பான சண்டைக் காட்சி அரியலூர் நெடுஞ்சாலையில் முன்னணி ஸ்டண்ட் மாஸ்டர் தினேஷ் சுப்பராயன் தலைமையில் படமாக்கப்படும் போது சற்றும் எதிர்பாராத வகையில் விபத்து ஏற்பட்டது. இதில் சிறு காயங்களுடன் ஹம்சவிர்தன் உள்ளிட்டோர் தப்பினர். உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

ராம்கி, 'கே ஜி எஃப்' புகழ் கருடா ராம், பி எல் தேனப்பன், வேல ராமமூர்த்தி உள்ளிட்டோர் முதல் கட்ட படப்பிடிப்பில் பங்கேற்ற நிலையில், முன்னணி நட்சத்திரங்கள் அடுத்த கட்ட படப்பிடிப்புகளில் கலந்து கொள்கின்றனர்.

சஸ்பென்ஸ் கலந்த அதிரடி கமர்ஷியல் திரைப்படமாக உருவாக உள்ள 'மகேஸ்வரா' படப்பிடிப்பு ரஷ்யா, பொலிவியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்படத்திற்கு மோகன் குமார் ஒளிப்பதிவு செய்ய ரஷாந்த் ஆர்வின் இசையமைக்கிறார். மக்கள் தொடர்பு பணிகளை நிகில் முருகன் கவனிக்கிறார்.

இதுவரை ஏற்றிராத முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் 'மகேஸ்வரா' திரைப்படத்தில் ஹம்சவிர்தன் நடிக்கிறார். அதிக பொருட்செலவில், விறுவிறுப்பான கதைக்களத்தில் உருவாகி வரும் இந்த திரைப்படம் அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவரும் என்று படக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## டீப் பிரைன் ஸ்டிமுலேஷன் அறுவைசிகிச்சை வழியாக பார்க்கின்சன்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்காவைச் சேர்ந்த இளம் நோயாளிக்கு புது வாழ்வு தந்த காவேரி மருத்துவமனை ஆழ்வார்பேட்டை

சென்னை, 04 அக் 2024: காவேரி மருத்துவமனை ஆழ்வார்பேட்டை, அதன் முதல் டீப் பிரைன் ஸ்டிமுலேஷன் (டி பி எஸ்) அறுவைசிகிச்சை வெற்றிகரமாகப் பூர்த்தியடைந்திருப்பதை பெருமிதத்துடன் அறிவித்திருக்கிறது. இம்மருத்துவமனையின் மிக நவீன மூளை நரம்பியல் சிகிச்சை வரலாற்றில் இது ஒரு முக்கியமான முன்னேற்ற நடவடிக்கையாகும். 32 வயதிலிருந்து பார்க்கின்சன்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு தற்போது 37 வயதாகிற ஸ்ரீலங்காவைச் சேர்ந்த தொழிலதிபரான இவருக்கு இந்த சிக்கலான அறுவைசிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அவரது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கையை கடுமையாக பாதித்த திறனிழப்பு அறிகுறிகளினால் அவர் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியிருந்தார். தொடக்கத்தில், மருந்துகளைக் கொண்டு தனக்கு வந்திருந்த பார்க்கின்சன்ஸ் நோயை அவர் சமாளித்து வந்தார். எனினும், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மருந்துகளின் பயனளிக்கும் தன்மை குறைந்ததன் காரணமாக அடிக்கடி பாதிப்பின் தீவிர நேர்வுகளை அவர் அனுபவிக்க நேர்ந்தது. இதனால் நடப்பது மற்றும் தினசரி நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவற்றில் கூட நம்பிக்கையிழந்தவராக அவர் மாறினார். பேச்சு குளறியதோடு, பொருட்களை பிடிப்பதிலும் அவருக்கு சிரமம் இருந்தது. ஒரு நாளுக்கு ஏழு முறைகள் என அவர் மருந்து எடுத்துக்கொள்ளும் எண்ணிக்கை அதிகரித்தபோதிலும்கூட மிகக்குறைந்த நேரங்களுக்கு மட்டுமே அவருக்கு நிவாரணம் இதனால் கிடைத்தது. வாழ்க்கையின் தரம் இதனால் மோசமடைந்ததால் சமூகத்திலிருந்து தனித்து ஒதுங்கி வாழும் சூழல் உருவானது. மருந்துகளின் ஒரு பக்க விளைவாக கட்டுப்படுத்த இயலாத இயல்புக்கு மாறான அசைவுகளின் காரணமாக ஒரு கடும் விபத்து கூட இவருக்கு ஏற்பட்டது. கடும் பிரச்சனைக்கு தீர்வை தேடிய இந்நோயாளி, ஆழ்வார்பேட்டையிலுள்ள காவேரி மருத்துவமனையை நாடி வந்தார். இவரை பரிசோதித்த நரம்பியல் நிபுணர்களின் குழு, முதிர்ச்சியடைந்த பார்க்கின்சன்ஸ் நோய் பாதிப்புள்ளவர்களுக்கு மிக நவீன சிகிச்சை விருப்பத்தேர்வான டீப் பிரைன் ஸ்டிமுலேஷன் (டி பி எஸ்) செயல்முறையை பரிந்துரைத்தது. டி பி எஸ் செயல்முறையில் மூளையின் குறிப்பிட்ட பகுதியில் எலெக்ட்ரோலட் பதியம் செய்வதும் மற்றும் இயக்கம் தொடர்பான அறிகுறிகளை கட்டுப்படுத்த உதவ மின் தூண்டுணர்வுகளை வழங்குகிற ஒரு பேஸ்மேக்கர் போன்ற சாதனத்துடன் அவை இணைக்கப்படுவதும் உள்ளடங்கும். டிபிஎஸ் அறுவைசிகிச்சை என்பது மிக நுட்பமான ஒரு மருத்துவ செயல்முறை அறுவைசிகிச்சைக்கு முன்பு நரம்பியல் நிபுணர்களாலும் மற்றும் உளவியல் மருத்துவர்களாலும் செய்யப்படுகிற விரிவான மதிப்பாய்வுகள் அவசியமாக இருக்கின்றன. ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகிற இந்த குழுபணியானது, அறுவைசிகிச்சை நடைபெறும் நேரத்திலும் நீள்கிறது. மயக்கமருந்தியல் நிபுணரால் வலி இல்லாமல் அதே நேரத்தில் விழிப்புணர்வுடன் நோயாளி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் எலெக்ரோடுகளை பதிய வைப்பதற்கு துல்லியமான இடத்தை நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணர் கண்டறிவதற்கு நரம்பியல் மருத்துவர் உதவுகிறார். இவ்வாறு சிறப்பான ஒருங்கிணைப்போடும், ஒத்துழைப்போடும் மேற்கொள்ளப்பட்ட அறுவைசிகிச்சையைத் தொடர்ந்து இந்நோயாளி உட்கொண்டு வந்த மருந்துகளின் அளவு 80மூ-க்கும் அதிகமாக குறைக்கப்பட்டிருக்கிறது. அவரது பாதிப்பு அறிகுறிகளும் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றன. இதைத் தொடர்ந்து தனது சொந்த நாட்டிற்கு திரும்பியிருக்கும் இவர், இயல்பான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார். குடும்பத்தினரை அக்கரையுடன் கவனித்துக் கொள்வது, பிசினஸ் செயல்பாடுகளை மேற்கொள்வது, சமூக செயல்பாடுகளில் மீண்டும் ஈடுபடுவது என ஒரு புதிய வாழ்க்கையை இவர் மீண்டும் வாழத் தொடங்கியிருக்கிறார்.

ஆழ்வார்பேட்டை, காவேரி மருத்துவமனையில், நரம்பியல் நிபுணராக பணியாற்றும் டாக்டர். வெங்கட்ராமன் கார்த்திகேயன், இந்த அறுவைசிகிச்சையின் விளைவாக ஏற்படும் நிலைமாற்றம் குறித்து விளக்கி பேசும்போது, அறுவைசிகிச்சைக்கு முன்னதாக, “கடுமையான நகர்வு மற்றும் இயக்க பிரச்சனைகளினால் இந்நோயாளி கடுமையாக சிரமப்பட்டார். இயல்பான வாழ்க்கையை வாழ்வது அவருக்கு இயலாத ஒன்றாக மாறியிருக்கிறது. வெற்றிகரமான இந்த டி பி எஸ் அறுவைசிகிச்சைக்குப் பிறகு, அவர் முன்பு எடுத்து வந்த மருந்தின் அளவில் ஒரு மிகச்சிறிய அளவையே இப்போது அவர் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு அவர் குணம்பெற்றிருக்கிறார். இயல்புக்கு மாறான அவரது நகர்வுகளும், அசைவுகளும் இப்போது முற்றிலுமாக மறைந்துவிட்டன,” என்று குறிப்பிட்டார்.

காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனரும், செயலாக்க இயக்குநருமான டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் இது தொடர்பாக கூறியதாவது: “பார்க்கின்சன்ஸ் நோய், நடமாட்டத்திலிருந்து சுதந்திரமாக செயல்படுவது வரை வாழ்க்கையின் ஒட்டுமொத்த தரத்தையும் பாதிக்கக்கூடிய ஒரு நிலையாகும். 37 வயதான இந்நோயாளிக்கு செய்யப்பட்டிருக்கும் டீப் பிரைன் ஸ்டிமுலேஷன் அறுவைசிகிச்சை (டிபிஎஸ்) என்ற மேம்பட்ட செயல்முறையானது பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டிருக்கிற, அதுவும் குறிப்பாக வாழ்க்கையின் ஆரம்ப நிலையிலேயே இப்பாதிப்பின் சவால்கள் எதிர்கொள்கிற இளம் நோயாளிகளுக்கு சிறப்பான தீர்வை வழங்குகிறது. டிபிஎஸ் போன்ற நவீன சிகிச்சைகளின் வழியாக உடல்சார்ந்த திறன்களை அத்தகைய நோயாளிகளுக்கு திரும்ப வழங்குவதுடன் சுதந்திரமாக செயல்படும் உணர்வையும், தைரியத்தையும் மேம்பட்ட நலவாழ்வு உணர்வையும் வழங்குவதே எமது நோக்கமாகும். நிபுணத்துவமிக்க நரம்பியல் மருத்துவர்கள் மற்றும் அறுவைசிகிச்சை நிபுணர்களை உள்ளடக்கிய எமது குழுவின் மூலம் மருத்துவ மேலாண்மை என்ற இலக்கையும் கடந்து புதிய நம்பிக்கையையும், சிறப்பான எதிர்காலத்தையும் உறுதிசெய்கிற தனிப்பயனாக்கப்பட்ட பராமரிப்பை வழங்குவதில் எங்களை நாங்கள் அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறோம்.”

## சிகிச்சை முடிந்து நலமுடன் வீடு திரும்பினார் ரஜினி

சென்னை, 04 அக் 2024: சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் உடல்நலக்குறைவால் அனுமதிக்கப்படிருந்த ரஜினிகாந்த் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார்.

நடிகர் ரஜினிகாந்த் (வயது 74) திடீர் உடல் நலக்குறைவு காரணமாக சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் கடந்த 30ம் தேதி அனுமதிக்கப்பட்டார். ரஜினிக்கு அடிவயிற்றுக்கு அருகே ரத்த நாளம் பெரிதாகி இருப்பதால் அதற்குரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியானது. நடிகர் ரஜினிகாந்தின் இதயத்திற்கு செல்லும் ரத்தக் குழாயில் வீக்கம் இருந்தது.

இதையடுத்து முதுநிலை டாக்டர்கள் குழுவினர், ரத்த நாளத்தில் உள்ள வீக்கத்தை சரிசெய்யும் வகையில் ‘ஸ்டென்ட்’ பொருத்தினர். ஸ்டென்ட் பொருத்தப்பட்ட பிறகு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ரஜினிகாந்தின் உடல்நிலை முன்னேறியதை தொடர்ந்து, அவர் சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்டார். தொடர்ந்து மருத்துவக்குழு அவரை கண்காணித்து வந்தது.

தொடர் சிகிச்சையில் உடல்நிலை சீரானதைத் தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த் இன்று வீடு திரும்பினார்.

## பி. சுசீலா, கவிஞர் மு.மேத்தாவுக்கு “கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது:” முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, 04 அக் 2024: முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளை கவிஞர் மு. மேத்தா, பின்னணிப் பாடகி பி. சுசீலா ஆகியோருக்கு வழங்கி சிறப்பித்தார்.



விருதுடன் தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், நினைவுப் பரிசும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா. வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திரையுலகில் 20,000-க்கும் மேற்பட்ட பலமொழிப் பாடல்களைப் பாடியவரும், “தென்னிந்தியாவின் இசைக்குயில்” என்றும், “மெல்லிசை அரசி” என்றும் பாராட்டப்பட்டவருமான திரைப்படப் பின்னணிப் பாடகி பி.சுசீலா, தமிழ்ப் பேராசிரியரும், புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்தவரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான கவிஞர் மு.மேத்தா ஆகிய இருவருக்கும், 2023ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் 24.9.2024 அன்று அறிவிப்பு வெளியிட்டார். அந்த அறிவிப்பின்படி, முதலமைச்சர் இன்றைய தினம், கலைஞரின் நூற்றாண்டு நினைவாக கவிஞர் மு. மேத்தா, பின்னணி பாடகி பி. சுசீலா ஆகியோருக்கு 2023ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளை வழங்கினார்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வழக்கமாக வழங்கப்படும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுடன், சிறப்பினமாகப் பெண்மையைப் போற்றும் வகையில் இந்த ஆண்டு கூடுதலாக ஒரு பெண் திரைக்கலைஞருக்கும் இந்த விருதினை வழங்கிச் சிறப்பித்திட முதலமைச்சர் 11.07.2024 அன்று உத்தரவிட்டிருந்தார் என்பது நினைவிருக்கலாம்.

## சுதர்சன் பார்மா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் - ன் 1:10 ஈக்விட்டி பங்கு பிரிப்பு திட்டத்திற்கு அதன் இயக்குநர் குழு ஒப்புதல்

சென்னை, 04 அக் 2024: வேதிப்பொருட்கள் மற்றும் மருந்து தயாரிப்பு தொழில்பிரிவில் ஈடுபட்டு வரும் ஒரு முன்னணி நிறுவனமான சுதர்சன் பார்மா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் - ன் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஈக்விட்டி பங்குகள் 1:10 என்ற விகிதத்தில் பிரிக்கப்படும். அதாவது, ஒரு பங்கு 10 பங்குகளாக பிரிக்கப்படும், எனினும் இந்த பங்கு பிரிப்பு திட்டமானது பங்குதாரர்களின் ஒப்புதல் மற்றும் தேவைப்படுகிற அதிகார / சட்ட அமைப்புகளின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும். சமீபத்தில் “சுதர்சன் மாவென் பார்மா பிரைவேட் லிமிடெட்” என்ற புதிய நிறுவனத்தை நிறுவி பதிவு செய்திருக்கிறது.

அனைத்து வகையான மருந்துப் பொருட்கள், சுகாதார பராமரிப்பு தயாரிப்புகள், ஆயுர்வேதம் சார்ந்த மற்றும் உணவுமுறை துணை தயாரிப்புகள் ஆகியவற்றை தயாரிப்பது, உருவாக்குவது, பதப்படுத்துவது, மேம்படுத்துவது, சுத்திகரிப்பது மற்றும் அவைகள் மீதான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்பவை இத்துணை நிறுவனத்தின் பிரதான குறிக்கோளாக இருக்கும். இதற்கு முன்னதாக ஜூலை மாதத்தில் நடைபெற்ற கூட்டத்தில், நிறுவனத்தின் புரமோட்டர்களுக்கு மாற்றத்தக்க வாரண்ட்டுகள் வெளியீடு வழியாக நிதி திரட்டும் திட்டத்திற்கு இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு ஒப்புதல் வழங்கியிருந்தது. சுதர்சன் பார்மா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (எஸ் பி ஐ எல்), வேதிப்பொருட்கள் மற்றும் மருந்துகள் தயாரிப்பு தொழில்பிரிவில் ஒரு முன்னணி நிறுவனமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இத்தொழில் துறையில் 25 ஆண்டுகளுக்கும் அதிகமான ஒருங்கிணைந்த அனுபவத்தைக் கொண்டிருக்கும் திரு. ஹேமல் வி. மேத்தா மற்றும் திரு. சச்சின் வி. மேத்தா ஆகிய இந்நிறுவனத்தின் புரமோட்டர்களால் வழிநடத்தப்படும் எஸ் பி ஐ எல், ஸ்பெஷாலிட்டி வேதிப்பொருட்கள் மற்றும் பல்க் டிரக்குகள் எனப்படும் பிரிவில் வலுவான அடித்தளத்தை நிறுவியிருக்கிறது. ஒருங்கிணைக்கப்பட்ட வேதிப்பொருள் மற்றும் மருந்து தயாரிப்பு நிறுவனத்தை உருவாக்க வேண்டுமென்ற அவர்களது தொலைநோக்கு திட்டமானது, இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தூண்டுதலாக செயல்பட்டிருக்கிறது. அத்துடன், இந்நிறுவனம் நம்பகத்தன்மை மற்றும் புத்தாக்கத்திற்கான நற்பெயரை இத்தொழில்துறையில் வலுவாக உருவாக்கியிருக்கிறது. மருந்து தயாரிப்பு பெயிண்ட்கள், உணவுப்பொருட்கள் மற்றும் அட்ஹெசிவ்ஸ் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிற சிறப்பு வேதிப்பொருட்கள் மற்றும் இன்டர்மீடியேட்கள் மீது சிறப்பு கூர்நோக்கத்துடன் மருந்து தயாரிப்பு மற்றும் வேதிப் பொருட்களுக்கான தொழில்பிரிவுகள் ஆகிய இரண்டிலும் எஸ் பி ஐ எல் இயங்கி வருகிறது. உள்நாட்டிலும் மற்றும் சர்வதேச அளவிலும் தனது செயலிருப்பை இந்நிறுவனம் விரிவுபடுத்தியிருப்பதுடன் யுகே, ஆஸ்திரேலியா, உஸ்பெகிஸ்தான், சிரியா, ஓமன், தைவான் மற்றும் மேனா பிராந்தியத்திற்கு தனது தயாரிப்புகளை இது ஏற்றுமதி செய்துவருகிறது.

## இந்திய பெருநகரங்களில் சுயதொழில் செய்யும் பெண்களில் 65% பேர் வணிகக் கடன் வாங்கவில்லை: கிரிசில் மற்றும் டிபிஎஸ் பேங்க் இந்தியா நடத்திய கருத்துக்கணிப்பில் தெரியவந்திருக்கிறது!!




சென்னை, 04 அக் 2024: டிபிஎஸ் பேங்க் இந்தியா, கிரிசில் உடன் இணைந்து மேற்கொண்ட, 'பெண்கள் மற்றும் நிதி' என்ற கருத்துக்கணிப்புத் தொடரின் மூன்றாவது அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது. 10 முக்கிய இந்திய நகரங்களில் சுயதொழில் செய்யும் 400 பெண்களிடம் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பின் அடிப்படையில், இந்த அறிக்கை சுயதொழில் செய்யும் பெண்களின் சூழ்நிலைகள் மற்றும் தொழில்முனைவோராக அவர்கள் எதிர்கொண்ட அனுபவங்கள் பற்றிய பிரத்தியேக நுண்ணறிவுகளை வெளிப்படுத்தி இருக்கிறது.

இந்த அறிக்கையானது, அவர்களின் வணிகத்திற்கான நிதி ஆதாரங்கள், வங்கியைப் பயன்படுத்துவதில் அவர்களுக்கு இருக்கும் பழக்கவழக்கங்கள், டிஜிட்டல் கட்டண முறையில் அவர்களுடைய விருப்பத்தேர்வுகள், பணியிடத்தில் மற்றவர்களுடன் செயல்படும் விதம் மற்றும் அவர்களின் நிறுவனத்தில் நிலைத்தன்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற அம்சங்கள் குறித்து ஆராய்கிறது. மேலும், பாலினம் தொடர்பாக எதிர்கொள்ளும் ஏற்றத்தாழ்வுகள் போன்ற சவால்களையும் ஆராய்கிறது. இவற்றை அடுத்து, வயது, வருமான வரம்பு மற்றும் இருக்குமிடம் போன்ற காரணிகள் அவர்கள் எடுக்கும் முடிவுகளில் தாக்கத்தை உருவாக்குகின்றன என்பதையும் பகுப்பாய்வு செய்கிறது. இந்த அறிக்கை, வணிகத்தை செயல்படுத்துவதற்காக பெண் தொழில்முனைவோர் ஆதரவு மற்றும் வாய்ப்புகளை எங்கெங்கு தேடுகிறார்கள் என்பது போன்ற சில முக்கிய தலைப்புகளையும் ஆராய்கிறது.

இந்த அறிக்கை பற்றி கருத்து தெரிவித்த டிபிஎஸ் வங்கி இந்தியாவின் நிர்வாக இயக்குனர் திரு. திவ்யேஷ் தலால், "எங்களது சமீபத்திய 'பெண்கள் மற்றும் நிதி' அறிக்கையிலிருந்து பெறப்பட்டிருக்கும் நுண்ணறிவு, நம்மால் நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கிய பகுதிகளை அடிக்கோடிட்டு காட்டியிருக்கிறது. விழிப்புணர்வு கல்வி மற்றும் பயிற்சித்திட்டங்கள் மூலம் அரசாங்கம் வழங்கும் வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், அவற்றை பின்பற்றி பலனடைவதற்குமான வாய்ப்புகள் இருப்பதை நாங்கள் காண்கிறோம். மேலும், வணிகத்தில் பெண்களின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு கூட்டு செயல்பாடு, வழிகாட்டுதல், திறன்-கட்டமைப்பு மற்றும் அறிவு பரிமாற்றத்தை முன்னெடுக்கும் நெட்வொர்க்கிங் தளங்கள் மற்றும் சமூகங்களுடன் தொழில் முனைவோருக்கான சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் இது எடுத்துகாட்டுகிறது. டிபிஎஸ் வங்கி இந்தியா, பாரம்பரிய வங்கி செயல்பாடுகளைத் தாண்டி தொழில்முனைவோருக்குத் தேவையான ஆதரவை அளித்து வருகிறது. சிறு, நடுத்தர தொழில்துறை மற்றும் ஸ்டார்ட்அப்களுக்கு நம்பகமான கூட்டுப் பங்குதாரராக செயல்பட்டு வருகிறது. கிரிசில் போன்ற கூட்டு செயல்பாட்டு நிறுவனங்களுடன் இணைந்து, தரவு சார்ந்த நுண்ணறிவுகளின் அடிப்படையில், பெண்களின் தொழில் முனைவோர் பயணங்களை நன்கு புரிந்துகொண்டு அவர்களுக்கு அதிகாரம் அளிக்க தொடர்ந்து பணியாற்றுவோம்.'' என்றார்.

டிபிஎஸ் பேங்க் இந்தியா, பெண் தொழில்முனைவோருக்குக் குறிப்பான சேவைகளை வடிவமைக்க இந்த அறிக்கையிலிருந்து பெறப்பட்ட நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகிறது. மேலும் தனது கூட்டு நிறுவனங்களுடன் இணைந்து நெருக்கமாக செயல்பட்டு வருகிறது. ஸாகில் உடனான கூட்டு செயல்பாட்டின் மூலம், டிபிஎஸ் பேங்க் இந்தியா, ஸாகில் ஈ எம் எஸ் மீதான தள்ளுபடிகள் போன்ற பிரத்தியேக பலன்களை வழங்குகிறது. ஸாகில் ஈ எம் எஸ் என்பது செலவு மேலாண்மையை ஒழுங்குபடுத்தும் ஒரு வசதியாகும். பெண் தொழில்முனைவோர் ஸாகில் பேமெண்ட்டுக்கான அட்டை வழங்குவதற்கான கட்டணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களில் சிறப்பு தள்ளுபடியைப் பெறமுடியும். மேலும் வரித் தீர்வுகளும் தள்ளுபடி செய்யப்படும். பண்ட்எனேபில் உடனான கூட்டு செயல்பாட்டின் மூலம், நிதி திரட்டுதல் தொடர்பான அறிவைக் கற்பிக்கும் நிகழ்ச்சிகள், சந்தை உத்திகள் மற்றும் தொழில் வாய்ப்பு கேட்கும் முறைகள் ஆகியவற்றில் திறன்-வளர்ப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து வருகிறது. ஒரே தளத்தில் இதர நிறுவனங்களுடன் சேர்ந்து பணியாற்ற இடவசதியைப் பகிர்ந்து கொள்ளுதல் [co-working spaces] மற்றும் தொழிலை உத்வேகப்படுத்தும் திட்டங்களில் சிறப்புச் சலுகைகளை பெண் தொழில்முனைவோருக்கு வழங்குவதற்காக, குர்கானில் செயல்பட்டுவரும் நிதி-அடிப்படையிலான ஸ்டார்ட் அப் நிறுவனமான மிஸீபீவீணீ Accelerator உடன் டிபிஎஸ் பேங்க் இந்தியா இணைந்து செயல்பட்டு வருகிறது.

## ரூ.740 கோடி வரையிலான ஆரம்பப் பொது வழங்கலுக்காக, குமார் ஆர்ச் டெக் லிமிடெட் செபி யிடம் டி ஆர் எச் பி ஐ தாக்கல் செய்கிறது

சென்னை, 04 அக் 2024: வாசிர் அறிக்கையின்படி மார்ச் 31, 2024 நிலவரப்படி மதிப்பின் அடிப்படையில், இந்தியாவில் பி வி சி2 கலவை அடிப்படையிலான கட்டுமானப் பொருட்களின் மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளரான குமார் டெக் லிமிடெட், அதன் வரைவு ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸை ("டி ஆர் எச் பி") சந்தைக் கட்டுப்பாட்டாளரான செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா ("செபி") யிடம் தாக்கல் செய்துள்ளது.

இந்த நிறுவனம் ரூ.7400 மில்லியன் (ரூ.740 கோடி) வரையிலான ஆரம்ப பொது வழங்கல்கள் மூலம் ஈக்விட்டி பங்குகளின் (ஒவ்வொன்றும் ரூ.2 முக மதிப்பு கொண்ட) வழங்கல் மூலம் நிதி திரட்ட திட்டமிட்டுள்ளது.

இந்த வழங்கலானது மொத்தமாக ரூ.2400 மில்லியன் (ரூ.240 கோடி) வரையிலான ஈக்விட்டிப் பங்குகளின் புதிய வெளியீடு மற்றும் மொத்தமாக ரூ.5000 மில்லியன் (ரூ.500 கோடி) வரையிலான விற்பனை செய்யும் பங்குதாரர்களின் விற்பனைக்கான வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

நிகர வருவாயை (வீ) பி வி சி-அடிப்படையிலான தயாரிப்புகளை தயாரிப்பது தொடர்பான கிரீன்ஃபீல்ட் திட்டத்திற்கான அதன் மூலதனச் செலவினத் தேவைகளுக்கு நிதியளிப்பதற்காக முழுச் சொந்தமான துணை நிறுவனமான டி ஐ பி எல் இல் முதலீடு, மதிப்பிடப்பட்ட தொகை ரூ.1820.92 மில்லியன் [ரூ. 182.09] கோடிகள்] மற்றும் மீதமுள்ள தொகை பொது நிறுவன நோக்கங்களுக்கான நிதியளிப்பிற்கு பயன்படுத்த இந்த நிறுவனம் முன்மொழிகிறது.

ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் வழங்கப்படும் இந்த ஈக்விட்டி பங்குகள் பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளது.

மோதிலால் ஓஸ்வால் இன்வெஸ்ட்மென்ட் அட்வைசர்ஸ் லிமிடெட் மற்றும் ஈக்யுரஸ் கேபிடல் பிரைவேட் லிமிடெட் ஆகியவை இந்த வெளியீட்டிற்கான புக் ரன்னிங் லீடிங் மேனேஜர்கள் ஆவர்.

இந்த நிறுவனம் (i) பலகை/ஷீட்கள் மற்றும் அவற்றின் வழித்தோன்றல்களான டிரிம்போர்டுகள், கதவுகள் மற்றும் சுவர் மேற்கூரை பேனல்கள் மற்றும் காலம்கள் போன்றவை, (ii) மோல்டிங் மற்றும் கதவு பிரேம்களை உள்ளடக்கிய ப்ரொஃபைல்கள், (iii) ) மற்றும் சைனேஜ் தீர்வுகள் ஆகிய மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள தயாரிப்புகளின் ஒரு பரந்த வரம்பை வழங்குகிறது.

## பயணிகள் இல்லாததால் சென்னையில் 10 விமான சேவைகள் ரத்து




சென்னை, 04 அக் 2024: சென்னை விமான நிலையத்தில் போதிய பயணிகள் இல்லாததால் இன்று 5 வருகை விமானங்கள் மற்றும் 5 புறப்பாடு விமானங்கள் என 10 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இலங்கை, பெங்களூரு, மும்பை, அந்தமான், மதுரை ஆகிய இடங்களில் இருந்து வருகை தரும் 5 விமானங்களும், சென்னையில் இருந்து இலங்கை, பெங்களூரு, மும்பை, அந்தமான், மதுரை ஆகிய இடங்களுக்கு புறப்பட்டு செல்லும் 5 விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. சென்னையில் இருந்து காலை 7.45 மணிக்கு அந்தமான் புறப்பட்டு செல்லும் ஆகாஷா ஏர்லைன்ஸ் விமானம், காலை 11.20 மணிக்கு இலங்கை செல்லும் ஏர் இந்தியா விமானம், பகல் 1.20 மணிக்கு பெங்களூர் புறப்படும் ஏர் இந்தியா விமானம், பகல் 1.40 மணிக்கு பெங்களூரு செல்லக்கூடிய ஆகாஷா ஏர்லைன்ஸ் விமானம் மற்றும் பிற்பகல் 3.25 மணிக்கு மும்பை செல்லும் ஏர் இந்தியா விமானம் ஆகிய 5 புறப்பாடு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சென்னை விமான நிலையத்திற்கு காலை 7.05 மணிக்கு பெங்களூரில் இருந்து வரவேண்டிய ஆகாஷா ஏர்லைன்ஸ் விமானம், பகல் 12.05 மணிக்கு, மும்பையில் இருந்து வரும் ஏர் இந்தியா விமானம், பகல் 1 மணிக்கு, அந்தமானில் இருந்து வரவேண்டிய ஆகாஷா ஏர்லைன்ஸ் விமானம், பிற்பகல் 2.45 மணிக்கு, மதுரையில் இருந்து வரும் ஏர் இந்தியா விமானம், மாலை 3.40 மணிக்கு, இலங்கையில் இருந்து வரும் ஏர்இந்தியா விமானம், ஆகிய 5 வருகை விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

விமான சேவைகள் ரத்து குறித்து பயணிகளுக்கு முன்னதாகவே தகவல் தெரிவிக்கப்பட்டதால் பெரிய அளவில் சிரமங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 37 தமிழக மீனவர்கள் விடுதலை: இலங்கை நீதிமன்றம் உத்தரவு



சென்னை, 04 அக் 2024: இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 37 பேரை விடுதலை செய்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த 37 க்கும் மேற்பட்ட மீனவர்கள், கடந்த மாதம் 21 ம் தேதி மீன்பிடிக்க கடலுக்குள் சென்றபோது, எல்லை தாண்டி வந்து மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, அந்நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களை தாயகம் அழைத்து வர வேண்டும் என அரசுக்கு மீனவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் கோரிக்கை முன்வைத்த நிலையில், மாநில அரசு, மத்திய அரசுக்கும், வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு மீனவர்களை மீட்டு வர கோரிக்கை முன்வைத்து இருந்தது. இதன்பேரில் இலங்கை அரசிடம் மத்திய அரசு சார்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்நிலையில், தமிழக மீனவர்கள் 37 பேரை விடுதலை செய்து இலங்கை பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அவர்களின் 3 படகுகளை அரசுடைமையாக்க உத்தரவிடப்பட்டு, இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனால் விடுதலை செய்யப்பட்ட அனைவரும் இந்திய துணை தூதரக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு ஓரிரு நாட்களில் தமிழகம் திரும்புவார்கள்.




**சென்னை, 04 அக் 2024: அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி ஆங்கிலத் துறையின் சார்பாக பைசாண்டியம் என்ற வருடாந்திர கலை இலக்கியக் கலாச்சார விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. துறைகளுக்கிடை நிகழ்ந்த இவ்விழாவில் நாடாளுமன்ற (லோக்சபா) உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துக் கொண்டார். இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பி. மகாவீர், துணை முதல்வர், பல்வேறு துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்துக் கொண்டனர். ஃபேசஸ் ஸ்பீக், பிரிங் அலைவ் ஷேக்ஸ்பியர் ஆகிய மேடை நிகழ்வுகள் நடந்தேறின. மாணவர்களுக்காக நடத்தப்பட்ட ரீல்ஸ் அண்ட் திரில்ஸ், பேஷன் இண்ஸ்டா மற்றும் கிளிக் எ பிளிக் ஆப் போன்ற இணைய வழிப் போட்டிகள் திரையில் காட்சிப்படுத்தப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**